TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075207

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : Salem  PS: காவல்நிலையம் Vigilance and Anti corruption, Year ஆண்டு 2020  FIR No. மு.த.அ. எண் 9/AC/2020  Date: நாள் 07.11.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7(a) and 7(A) of the Prevention of Corruption (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 06.11.2020  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.11.2020  Time : நேரம் 18.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.11.2020  Time : நேரம் 18.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Oral.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் about 65 kms South east
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி O/o the Sub Registrar, Thammampatty, Gangavalli(Tk) Salem Dt.,
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Chandramouli  (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Tr. (Late) Sundaram
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Additional Supdt. of Police  (g) Address : முகவரி Vigilance and Anti Corruption, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. P. Senthilkumar, I/c Sub Registrar, Thammampatty, Gangavalli (Tk) Salem (Dt).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet herewith attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. Chandramouli Rank ADSP to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

7/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 07.11.2020. 17.00 hrs.

Name: பெயர் S. Chandramouli
Rank: நிலை ................No. எண் ........
Additional Supdt. of Police
Vigilance and Anti Corruption,
Salem.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2020 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) and 7 (A) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

நேற்று 6.11.2020 ஆம் தேதி நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக இருந்து தற்போது பொறுப்பு சார்பதிவாளர் தம்மம்பட்டி ஆக பணிபுரிந்து வரும் திரு.பி.செந்தில்குமார் அவர்கள் பத்திரப்பதிவு, திருமணப்பதிவு, வில்லங்க சான்று நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் அந்த அலுவலகத்தில் செய்ய வேண்டிய இதர பணிகளுக்காக தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் வரும் பொது மக்களிடம் அரசுக்கு கட்ட வேண்டிய கட்டணம் போக கூடுதலாக, அதாவது தனது பதவியை தவறாகப் பயன்படுத்தி நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள், ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில் நான், அரசு சாட்சிகள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு 6.11.2020 ஆம் தேதி இரவு சுமார் 07.45 மணியளவில் சேலம் மாவட்டம் தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் வந்தடைந்தபோது மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அப்போது மேற்படி அலுவலகத்தின் அருகில் நின்று கொண்டிருந்த நபர்களிடம் விசாரித்தபோது சார்பதிவாளர் அவர்கள் தற்போதுதான் அலுவலகத்திலிருந்து TN 90 9677 என்ற பதிவெண் கொண்ட வெள்ளைநிற Hyundai i 20 காரில் புறப்பட்டு நாவக்குறிச்சியில் உள்ள அவருடைய வீட்டிற்கு செல்வதாகவும் மேலும் அவர் தம்மம்பட்டியில் இருந்து மல்லியக்கரை செல்லும் சாலை வழியாகத்தான் அவருடைய வீட்டிற்கு செல்வார் என்றும் தெரிவித்த தகவலின் அடிப்படையில் நான், அரசு சாட்சிகள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் குழுவினருடன் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு தம்மம்பட்டி – மல்லியக்கரை செல்லும் சாலையில் சென்றபோது, ஹோலி மதர் மெட்ரிகுலேசன் பள்ளியின் அருகில் மேற்படி கார் சென்று கொண்டிருந்ததை கவனித்து, மேற்படி காரை முந்திச் சென்று அந்தக் காரை இரவு சுமார்

7.55 மணியளவில் இடைமறித்து, என்னையும், அரசு சாட்சிகளையும் மற்றும் ஆய்வாளர்களையும் அறிமுகம் செய்துகொண்டு, அந்தக் காரை ஓட்டிவந்த நபரை பற்றி விசாரித்தபோது அவர் தனது பெயர் பி.செந்தில்குமார் என்றும், தான் வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தற்போது தம்மம்பட்டி பொறுப்பு சார்பதிவாளராக இருந்து வருவதாகவும், தற்போதுதான் தான் அலுவல் முடித்து சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நேராக ஆத்தூர் நாவக்குறிச்சியில் உள்ள தனது வீட்டிற்கு சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவரது அலுவலகத்தினை திடீர் சோதனை செய்ய சாட்சிகளுடன் நான் வந்த விபரத்தையும், அப்போது மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்ததையும், அலுவலகத்தின் அருகில் இருந்தவர்கள் கொடுத்த தகவலின் பேரில் நான் மேற்படி திரு.செந்தில்குமாரின் காரை பின் தொடர்ந்து வந்ததையும் விளக்கிச் சொல்லி அவரை உடனே திடீர் சோதனைக் குழுவினருடன் அவரது அலுவலகத்திற்கு வரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர் எனது வேண்டுகோளை ஏற்று திடீர் சோதனைக்குழுவினருடன் தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இரவு சுமார் 8.30 மணியளவில் வந்தார். அப்போது மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்ததால் மேற்படி அலுவலகத்தின் சாவியை அலுவலக உதவியாளர் மூலம் எடுத்து வரச்செய்யும்படி அறிவுறுத்தியபிறகு மேற்படி திரு.செந்தில்குமார் அவர்களின் காரை மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பக்கமாக நிறுத்தி சாட்சிகள் முன்னிலையில் சோதனையிடப்பபட்டது. சோதனையின்போது மேற்படி காரின் டிரைவர் சீட்டுக்கு இடது பக்கம் உள்ள இருக்கைக்கு கீழ் பகுதியில் STAR ATR என்ற பெயர் பொறிக்கப்பட்ட கரும்பச்சை நிற லஞ்ச் பேக்கின் உள்பக்கமாக இருந்த பெரிய அறையில் டிபன் பாக்சுகளுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த பிரௌன் நிற கவரில் இருந்த ரூ.32,500/–, மேற்படி பிரௌன் நிற கவருக்கு கீழே இரண்டு கற்றைகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுகள் ரூ.7,000/– மற்றும் ரூ.2,500/– ஆகியவைகள் பற்றி அவரிடம் கேட்டபோது மேற்படி திரு.செந்தில்குமார் அவர்கள் முன்னுக்குப்பின் முரணாகவும், தகுந்த முகாந்திரம் சொல்லாததாலும், மேற்படி தொகை மொத்தம் ரூ.42,000/–ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி விசாரணையின்போது திரு.செந்தில்குமார் அவர்கள் அவருடைய மணிப்பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ஆத்தூர் HDFC வங்கியில்

கணக்கு எண். RALOAN – 40718180 ல் அவரது மனைவி C.P. அவ்வை என்ற பெயரில் 20.10.2020 தேதியில் ரூ.11,660/– செலுத்தியது தொடர்பான வங்கியின் Deposit slip ன் Counter slip, திரு.செந்தில்குமார் பெயரில் SBI வங்கி ஆத்தூர் கிளையில் உள்ள வங்கிக் கணக்கு எண். 00000030789072973 என்ற எண்ணிற்குரிய 1.10.2020 முதல் 6.11.2020 முடிய உள்ள வங்கிக் கணக்குப் பட்டியல் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும் தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலக சாவியை அலுவலக உதவியாளர் மூலம் திறக்கச் செய்து மேற்படி அலுவலக (1) தனிநபர் பண இருப்பு பதிவேடு தொகுதி எண். 07, (2) வருகைப் பதிவேடு, (3) இயக்கப்பதிவேடு மற்றும் (4) 6.11.2020 தேதியில் தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான 7 ஆவணங்களுக்கு பதிவுக்கட்டணம் மின்னனு முறையில் ரூ.36,365/– செலுத்தப்பட்டதற்கான Online Print out ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.42,000/–, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்படி நடவடிக்கையின்படியும் இதர ஆவணங்களைப் பரிசீலித்தும் மேற்கண்ட எதிரி திரு.பி.செந்தில்குமார் பொறுப்பு சார்பதிவாளர் தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் அவர்கள் அரசுப் பணி செய்வதற்காக கையூட்டு பெறுவது உறுதி செய்யப்பட்டு முதல் நோக்கு இருப்பதாலும், பிடிக்கக் கூடிய குற்றம் என்பதாலும் மேற்படி எதிரி மீது u/s 7 (a) and 7(A) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி குற்றம் புரிந்துள்ளார் எனத் தெரிகிறது.

எனவே மேற்கண்ட எதிரி மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வேண்டி காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களிடம் வாய்மொழியான அனுமதி பெறப்பட்டு அதன்பேரில் சேலம் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.9/AC/2020 u/s 7 (a) and 7(A) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அசலினையும், 6.11.2020ஆம் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும் (Proceedings), நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.42,000/– ஆகியவற்றை கனம் தனிநீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

7/11/2020.

கூடுதல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.